தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968, மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினு எண் 313-லிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம்

*313 வினு.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

வணிக வரி Appellate Tribunal -ன் கிளைகள் கோவை, கோவை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கோயம்புத்தூரில், விற்பனைவரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தின் கூடுதல் பிரிவு ஒன்று அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கி, 1967-ம் ஆண்டு, அக்டோபர் திங்களில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளியிலும், திருநெல்வேலியிலும் மேல்முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது வணிகவரி அப்பலேட் டிரிபுனலில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாமல் பல வழக்குகள் இருப்பதனுல், மேலும் இவற்றை ஏற்படுத்துவதற்கு இனிமேலாவது அரசாங்கம் முயற்சிக்குமா ? இப்போது ஒரு அதிகாரிதான் இருக்கிறுர். மூன்று அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மேலும் சில இடங்களில் நிறுவலாம் என்று அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது முதலிலே சேர்மென் அவர்கள் அப்பலேட் டிரிபுனலை இரண்டு இடங்களில் நிறுவலாம். ஒன்று கோயம்பத்தூரிலும் இன்னென்று திருச்சியிலும் நிறுவலாம் என்று பரிந்துரை வழங்கினுர்கள்.

தற்சமயம் கோயம்பத்தூரில்தான் நிறுவப்பட்டிருக்கிறது. ஆறு மாதங்களிலே திருச்சியிலே நிறுவவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை ஆலோசனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, does the opening of Sales Tax Appellate Tribunal offices in different centres depend upon the volume of cases that are to be decided by the Tribunal or is it because that the offices should be regionally distributed? If so, may I know whether the proposal of the Government to open new offices is justified and whether there are many cases pending? What is the inconvenience experienced by the people in going to the nearby Tribunal?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஏராளமான கேஸ்கள், தாவாக்கள் வீழ்ந்துவிட்டன, சென்னையில்மட்டும் இருந்தால் சரியல்ல என்பதல்ல. கோயம்பத்தூரில் நிறுவுவதன் மூலம் திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் அதோடு இணைக்கப்பட்டு, காலதாமதத்தை குறைப்பதற்காகவும் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. கோயம்பத்தூரில் இருக்கும் நடுவர் மன்றத்தைப்போல் திருநெல்வேலியிலும் ஏற்படுத்துவதற்கு இப்போது செயற்குறிப்பு இல்லை. திருச்சியிலே நிறுவலாமா என்பதைப்பற்றிய செயற் குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஏராளமான வழக்குகள் பெண்டிங்காக இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிச் சொல்லுகிற காரணத்தால், மாவட்டத்திற்கு ஒன்றாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்போது அந்த நிலைமையில் அந்த அளவிற்கு வழக்குகள் ஆகிறது என்றால் ரொம்பவும் பலவீனமான நிலைமை இந்த வருவாய்த்துறையில் ஏற்பட்டு விட்டதாகும்.

திரு. எம். கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கோயம்பத்தூரில் அப்பலேட் டிரிபுனல் 6 மாதங்களாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு உயர் அதிகாரிதான் நியமிக்கப்பட்டிருக்கிறார். கீழுள்ள அதிகாரிகள் இன்னும் நியமிக்கப்படாமல் இருப்பதால் காலதாமதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் அவர்களை விரைவிலே நியமிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனையை குறிப்பிலே வைத்துக்கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்முறையீடு கழகத்திற்கு முறையீட்டு செய்கிறவர்கள் 'disputed amount of Taxes' சர்ச்சைக்குறிய